**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.56/2023

நாள். 13.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 13.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.1 | ஜாதி | :----------- |
| பெயர் | பழனி | தொழில் | : |
| த/பெ. | மணி | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(1, 2, 3, 5, 6 Accused present) (A4 Died)**

**முதல் விசாரணை:-**

1. நான் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் குடியிருந்து நகை செய்யும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 2021ம் வருடம் என் மாமா பார்த்தசாரதி நகை வாங்கி வரச்சொல்லி என்னை சேலத்திற்கு அனுப்பிவைத்திருந்தார். TN 97 7449 என்ற எர்ட்டிகா காரில் நானும், ஓட்டுநர் பாஸ்கர் என்பவரும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மாலை 5, 6 மணி அளவில் ஒரு ஓட்டலில் சாப்பிட்டோம்.

2. பின்னர் சாப்பிட்டுவிட்டு காரில் ஏறினோம். நான் போனில் பேசிக்கொண்டு ஏறினேன். நான் பேசியதை அங்கிருந்த இரண்டு போலீசார் கேட்டுக்கொண்டார்கள். பின்னர் போலீசார் என்னிடம் நான் பேசியதை கேட்டுவிட்டு உன்னிடம் ஏது இவ்வளவு பணம் என்று கேட்டார்கள்.

என்னால் பணத்திற்கான பதிலை உரியமுறையில் சொல்ல முடியவில்லை. எனவே, அவர்கள் பணத்தை காவல் நிலையத்தில் வந்து பெற்றுக்கொள்ளும்படி சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள்.

3. என்னிடம் பணத்தை வாங்கிய போலீசார் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. பின்னர் நான் காவல் நிலையம் சென்றேன். அங்கு என்னை எழுதி கொடுக்கச் சொன்னார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனக்கு சரியாக எழுத தெரியாது என்பதால் அவர்களே எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1.** பின்னர் செய்யாறில் இருந்து ஒரு வழக்கறிஞரை வைத்து காவல் நிலையத்திற்கு சென்று எனது பணத்தை பெற்றுக்கொண்டேன்.

4. தற்போது என்னிடம் காட்டப்படும் பஞ்ச நாமாவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த பஞ்ச நாமாவில் கண்ட தொகையான ரூ.14,78,000/- எனது பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். இந்த பஞ்ச நாமாவில் கண்ட தொகை ரூ.14,78,000/- **ச.பொ. 1** ஆகும். அந்த பஞ்ச நாமா **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் போலீசார் விசாரணையில் எனக்கு தெரிந்த ஆற்காட்டை சேர்ந்த அண்ணாச்சி என்ற பெரியசாமி என்பவர் தங்க நகை கிராமிற்கு 300 குறைவாக வாங்கி தருவதாக சொல்லி அவருடைய செல்போன் எண் 8438009431 என்ற எண்ணை கொடுத்ததாக சொன்னேனா என்றால் இல்லை. நானும், மேற்படி எண்ணை தொடர்பு கொண்டு பேசியபோது தாங்கள் குறைந்த விலைக்கு நகை கொடுக்கும் தொழில் செய்து வருவதாகவும், சேலம் வந்தால் தங்க நகை காட்டுகிறோம் என்று

சொன்னதாகவும் நானும், எனது நண்பர் பாஸ்கர் என்பவரும் அதனை நம்பி சேலம் குரங்குசாவடிக்கு வந்தோமா என்றால் இல்லை.

3. அப்போது அண்ணாச்சி மற்றும் வழக்கறிஞர் விஜயகுமார் TN 34 T 9100என்ற ஸ்விப்ட் காரில் வந்து 5 தங்க காசுகளை காட்டினார்களா என்றால் இல்லை. நான் பரிசோதித்து விட்டு பணத்துடன் வருகிறேன் என்று சொல்லிவிட்டு 01.01.2021ம் தேதி காலை மீண்டும் அண்ணாச்சியிடம் பேசிவிட்டு சேலம் – பைபாஸ்ரோட்டில் உள்ள ஆனந்த பவன் ஓட்டல் அருகே அவர் சொன்னபடிக்கு வந்தேனா என்றால் இல்லை.

3. நான் அண்ணாச்சியையும், விஜயகுமாரையும் நம்பி ரூ.15 இலட்சத்தை எனது காரில் எடுத்துவந்து அண்ணாச்சியிடம் ஆனந்த பவுன் ஓட்டல் அருகே வந்துவிட்டதாக தகவல் சொன்னதன்பேரில் மாலை 6 மணி அளவில் TN 30 BF 9667 என்ற வெள்ளை கலர் ஐ 20 காரில் இரண்டு பேர் வந்து அம்மன் கார் சென்டர் மேற்காக எங்களை காரை நிறுத்திவிட்டு வரச்சொன்னார்களா என்றால் இல்லை. நாங்கள் மேற்கண்டபடி அந்த இடத்திற்கு போனபோது அங்கு அண்ணாச்சியும், விஜயகுமார் என்பவரும் இருசக்கர வாகனத்தில் வந்து எங்களிடம் இருந்த பணத்தை காட்டச்சொல்லி பார்த்தார்களா என்றால் இல்லை. அப்போது ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர்வந்து ஓட்டி வந்தவா தான் SI என்றும், பின்னால் உட்கார்ந்து வந்தவர் தான் Inspector என்று சொல்லி இங்கு என்ன கடத்தல் தொழில் செய்கிறிர்களா என்று கேட்டு என்னிடம் இருந்து ரூ.15 பணத்தை பறித்துக்கொண்டு என்னை சத்தம்போட்டு எங்களை காரை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்திற்கு வரச்சொல்லிவிட்டு அந்த காரில் அவர்களுடன் Inspector சென்றுவிட்டதாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. அப்போது வழக்கறிஞர் விஜயகுமார் தான் வந்த

இருசக்கர வாகனத்தை எடுத்து சென்றுவிட்டதாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. SI என்ற சொன்னவரை பிடித்து விசாரித்தபோது தான் SI இல்லை என்றும், தன் பெயர் உதயசங்கர் என்றும், தன்னுடன் வந்தவர் கொண்டலாம்பட்டியில் காவல் நிலையத்தில் வேலை பார்க்கும், SSI சரவணன் என்றும், காரில் வந்தவர் பெயர் அண்ணாச்சி என்கிற பெரியசாமி என்றும், ஓட்டுனர் பெயர் பரணிதரன் என்றும், காரில் வந்தவர் பெயர் ஜெகன் என்றும், எல்லோரும் வழக்கறிஞர் விஜயகுமாருடன் சேர்ந்து திட்டம்போட்டு பணத்தை கொள்ளை அடிக்க வந்தோம் என்று என்னிடம் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. என்னிடம் குறைந்த விலைக்கு தங்கம் கொடுப்பதாக சொல்லி நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றி வரவழைத்து போலீஸ்போல ஆள்மாறாட்டம் செய்து மிரட்டி என் பணம் ரூ.15 இலட்சத்தை பறித்து சென்ற 6 நபர்களான ஆஜர் எதிர்கள் மீது (இறந்துபோன 4 எதிரி உட்பட) ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு மேற்கண்ட சங்கதிகளை போலீசார் விசாரணையில் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது நானும், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/−த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.56/2023

நாள். 13.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 13.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.2 | ஜாதி | :----------- |
| பெயர் | பாஸ்கர் | தொழில் | : |
| த/பெ. | ராஜீ | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(1, 2, 3, 5, 6 Accused present) (A4 Died)**

**முதல் விசாரணை:-**

1. நான் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் குடியிருந்து பட்டு நெசவு செய்யும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 எனது நண்பர். அ.சா.1 கடந்த 2021ம் வருடம் சேலத்திற்கு செல்லவேண்டும் என்று Acting driverஆக வரச்சொல்லி என்னை அழைத்தார். சேலம் வந்துவிட்டு அங்கு சாப்பிட ஓட்டலுக்கு சென்றோம். அப்போது போலீசார் வந்து அ.சா.1ஐ விசாரித்தார்கள். கையில் வைத்திருநத பணத்தை பார்த்துவிட்டு அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேட்டாகள். அவர் என்ன பதில் சொன்னார் என்று தெரியவில்லை. பின்னர் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி சென்றார்கள். காவல்நிலையத்திற்கு சென்றோம் நான் காரிலேயே உட்கார்ந்து கொண்டேன். அவர்தான் உள்ளே சென்று பேசிக்கொண்டிருந்தார். காவல்

நிலையத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. பணத்தை நீதிமன்றம் மூலமாக பெற்றுக்கொள்ள முடியும் என்று என்னிடம் சொன்னார். மற்றப்படி எனக்கு ஒன்றும் தெரியாது, போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் போலீசார் விசாரணையில் அ.சா.1க்கு தெரிந்த ஆற்காட்டை சேர்ந்த அண்ணாச்சி என்ற பெரியசாமி என்பவர் தங்க நகை கிராமிற்கு 300 குறைவாக வாங்கி தருவதாக சொல்லி ஒரு செல்போன் எண் 8438009431 என்ற எண்ணை கொடுத்ததாக அ.சா.1 என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. நானும், மேற்படி எண்ணை தொடர்பு கொண்டு பேசியபோது தாங்கள் குறைந்த விலைக்கு நகை கொடுக்கும் தொழில் செய்து வருவதாகவும், சேலம் வந்தால் தங்க நகை காட்டுகிறோம் என்று சொன்னதாகவும் எனவே, அ.சா.1 என்னையும் அழைத்துக்கொண்டு சேலம் குரங்குசாவடிக்கு வந்தாரா என்றால் இல்லை.

3. அப்போது அண்ணாச்சி மற்றும் வழக்கறிஞர் விஜயகுமார் TN 34 T 9100என்ற ஸ்விப்ட் காரில் வந்து அ.சா.1னிடம் 5 தங்க காசுகளை காட்டினார்களா என்றால் இல்லை. அ.சா.1 பரிசோதித்து விட்டு பணத்துடன் வருகிறேன் என்று சொல்லிவிட்டு 01.01.2021ம் தேதி காலை மீண்டும் அண்ணாச்சியிடம் பேசிவிட்டு சேலம் – பைபாஸ்ரோட்டில் உள்ள ஆனந்த பவன் ஓட்டல் அருகே அவர் சொன்னபடிக்கு வந்தாரா என்றால் இல்லை.

3. அ.சா.1 அண்ணாச்சியையும், விஜயகுமாரையும் நம்பி ரூ.15 இலட்சத்தை அ.சா.1ன் காரில் எடுத்துவந்து அண்ணாச்சியிடம் ஆனந்த பவுன் ஓட்டல் அருகே வந்துவிட்டதாக தகவல் சொன்னதன்பேரில் மாலை 6 மணி அளவில் tn 30 BF 9667 என்ற வெள்ளை கலர் ஐ 20 காரில் இரண்டு பேர்

வந்து அம்மன் கார் சென்டர் மேற்காக எங்களை காரை நிறுத்திவிட்டு வரச்சொன்னார்களா என்றால் இல்லை. நாங்கள் மேற்கண்டபடி அந்த இடத்திற்கு போனபோது அங்கு அண்ணாச்சியும், விஜயகுமார் என்பவரும் இருசக்கர வாகனத்தில் வந்து அ.சா.1னிடம் இருந்த பணத்தை காட்டச்சொல்லி பார்த்தார்களா என்றால் இல்லை. அப்போது ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர்வந்து ஓட்டி வந்தவா தான் SI என்றும், பின்னால் உட்கார்ந்து வந்தவர் தான் Inspector என்று சொல்லி இங்கு என்ன கடத்தல் தொழில் செய்கிறிர்களா என்று கேட்டு அ.சா.1னிடம் இருந்து ரூ.15 பணத்தை பறித்துக்கொண்டு அ.சா.1ஐ சத்தம்போட்டு எங்களை காரை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்திற்கு வரச்சொல்லிவிட்டு அந்த காரில் அவர்களுடன் Inspector சென்றுவிட்டதாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. அப்போது வழக்கறிஞர் விஜயகுமார் தான் வந்த இருசக்கர வாகனத்தை எடுத்து சென்றுவிட்டதாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. SI என்ற சொன்னவரை பிடித்து விசாரித்தபோது தான் SI இல்லை என்றும், தன் பெயர் உதயசங்கர் என்றும், தன்னுடன் வந்தவர் கொண்டலாம்பட்டியில் காவல் நிலையத்தில் வேலை பார்க்கும், SSI சரவணன் என்றும், காரில் வந்தவர் பெயர் அண்ணாச்சி என்கிற பெரியசாமி என்றும், ஓட்டுனர் பெயர் பரணிதரன் என்றும், காரில் வந்தவர் பெயர் ஜெகன் என்றும், எல்லோரும் வழக்கறிஞர் விஜயகுமாருடன் சேர்ந்து திட்டம்போட்டு பணத்தை கொள்ளை அடிக்க வந்தோம் என்று அ.சா.1னிடம் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. அ.சா.1னிடம் குறைந்த விலைக்கு தங்கம் கொடுப்பதாக சொல்லி நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றி வரவழைத்து போலீஸ்போல ஆள்மாறாட்டம் செய்து மிரட்டி அ.சா.1ன் பணம் ரூ.15 இலட்சத்தை பறித்து சென்ற 6 நபர்களான ஆஜர் எதிர்கள் மீது (இறந்துபோன 4 எதிரி உட்பட)

ஓமலூர் காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்தன்பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் மேற்கண்ட சங்கதிகளை போலீசார் விசாரணையில் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது அ.சா.1ம் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/-த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**
SC.No.56/2023

நாள். 13.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 13.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.3 | ஜாதி | :----------- |
| பெயர் | சந்தோஷ்குமார் | தொழில் | : |
| த/பெ. | கணேசன் | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**<u>(1, 2, 3, 5, 6 Accused present) (A4 Died)</u>**

**<u>முதல் விசாரணை:-</u>**

1. நான் ஓமலூர் அண்ணாநகரில்குடியிருந்து சேலம் – தர்மபுரி தேசிய நெடுஞ்சாலையில் விநாயாக ஆட்டோ மொபைல் ஷாப் என்ற பெயரில் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1, அ.சா.2ஐ தெரியாது. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன்பேரில் எனது கடைக்கு முன்னர் எதோ ராபரி நடந்ததாக தெரிந்து கொண்டேன். எனக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் போலீசார் விசாரணையில் ஓமலூர் – தர்மபுரி மெயின்ரோடு ஆனந்த பவன் ஓட்டல் எதிரில் உள்ள எனது கடையில் 01.01.2021ம் தேதி மாலை 6

சுமாருக்கு இருந்ததாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. அன்று மாலை 6 மணிக்கு அ.சா.1ம், அசா.2ம் TN 97 X 7449 என்ற எர்ட்கா காரில்மேற்படி ஓட்டலின் எதிரே நின்றிருந்ததாகவும், சிறிது நேரத்தில் tn 30 BF 9667 ஐ20 என்ற காரில் வந்தவர்கள் மேற்படி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அம்மன் கார் சர்வீஸ் சென்டருக்கு மேற்கே நிறுத்தியதாகவும், மேற்படி காரை நோக்கி அ.சா.1ம், அசா.2ம் சென்றபோது அங்கு இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும், அவர்களுக்குள் பேசிகொண்டிருந்தபோது திடீரென தகராறு ஏற்பட்டு மோட்டார் சைக்கிளில் வந்தவர் அங்கிருந்து வண்டியை எடுத்துச் சென்றார் என்றும் TN 30 BF 9667 என்ற ஐ20 காரில் வந்தவர்களும் சென்றுவிட்டார்கள் என்றும், அப்போது அசா.1ம், அ.சா.2ம் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும் அ தை பார்த்து நானும், அக்கம் பக்கத்தினரும் அங்கு சென்று விசாரிக்க அவர் தன் பெயர் உதயசங்கர் என்று சொன்னதாகவும், அ.சா.1னிடம் விசாரித்தபோது தான் குறைந்த விலைக்கு நகை கிடைப்பதாக அண்ணாச்சி என்ற பெரியசாமி சொன்ன தகவலின்பேரில் 15 இலட்சத்துடன் காரில் வந்ததாகவும், அண்ணாச்சியும், அவரது நண்பர் விஜயகுமாரும் மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் Inspector என்றும், SI என்றும் சொன்னதாகவும் தான் வைத்திருந்த பணம் ரூ.15 இலட்சத்தை வாங்கி கொண்டு காவல் நிலையத்திற்கு வரும்படி சொல்லிவிட்டு சென்றதாகவும் மற்றவர்களும் சென்றுவிட்டதாகவும் அ.சா.1 தனக்கு சந்தேகமாக இருந்ததால் SI என்று சொன்ன உதயசங்கரை பிடித்து விசாரித்த போது அவர் தான் Inspector இல்லை என்றும் கொண்டலாம் பட்டியில் வேலை செய்யும் SSI என்று சொன்னதாகவும், தானும், அண்ணாச்சி மற்றும் விஜயகுமார் ஆகியோர் சேர்ந்து பணத்தை

கொள்ளையடிக்க வந்ததாகவும், எனவே அ.சா.1ம், அசா.2ம் உதயசங்கருடன் ஓமலூர்காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததாகவும், அந்த புகாரின்பேரிலான விசாரணையில் மேற்கண்ட சங்கதிகளை வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது அ.சா.1ம் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.56/2023

நாள். 13.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 13.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.4 | ஜாதி | :----------- |
| பெயர் | சதீஷ் | தொழில் | : |
| த/பெ. | பழனி | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**<u>(1, 2, 3, 5, 6 Accused present) (A4 Died)</u>**

**<u>முதல் விசாரணை:-</u>**

1. நான் ஜோடுகுழியில் குடியிருந்து அட்சயா ரைஸ் மில்லில் சூப்பர்வைஸ்சராக பணி செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1, அ.சா.2ஐ தெரியாது. நான் கடந்த 2021ம் வருட வாக்கில் செட்டிப்பட்டி அருகே இருக்கும் அம்மன் கார் சர்வீஸ் சென்டரில் கணக்காளராக வேலை செய்துவந்தேன். அப்போது ஒரு போலீஸ் ஆபிசர் வந்து பணத்தை பிடிங்கி கொண்டு சென்றது தெரியுமா என்று கேட்டார்கள் நான் தெரியாது என்று சொன்னேன். பின்னர் எனது முகவரியை வாங்கி கொண்டு சென்றுவிட்டார்கள். மற்றப்படி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் போலீசார் விசாரணையில் ஓமலூர் – தர்மபுரி மெயின்ரோடு ஆனந்த பவன் ஓட்டல் எதிரில் உள்ள எனது கடையில் 01.01.2021ம் தேதி மாலை 6 சுமாருக்கு இருந்ததாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. அன்று மாலை 6 மணிக்கு அ.சா.1ம், அசா.2ம் TN 97 X 7449 என்ற எர்ட்கா காரில்மேற்படி ஓட்டலின் எதிரே நின்றிருந்ததாகவும், சிறிது நேரத்தில் TN 30 BF 9667 ஐ20 என்ற காரில் வந்தவர்கள் மேற்படி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அம்மன் கார் சர்வீஸ் சென்டருக்கு மேற்கே நிறுத்தியதாகவும், மேற்படி காரை நோக்கி அ.சா.1ம், அசா.2ம் சென்றபோது அங்கு இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும், அவர்களுக்குள் பேசிகொண்டிருந்தபோது திடீரென தகராறு ஏற்பட்டு மோட்டார் சைக்கிளில் வந்தவர் அங்கிருந்து வண்டியை எடுத்துச் சென்றார் என்றும் TN 30 BF 9667 என்ற ஐ20 காரில் வந்தவர்களும் சென்றுவிட்டார்கள் என்றும், அப்போது அசா.1ம், அ.சா.2ம் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும் அ தை பார்த்து நானும், அக்கம் பக்கத்தினரும் அங்கு சென்று விசாரிக்க அவர் தன் பெயர் உதயசங்கர் என்று சொன்னதாகவும், அ.சா.1னிடம் விசாரித்தபோது தான் குறைந்த விலைக்கு நகை கிடைப்பதாக அண்ணாச்சி என்ற பெரியசாமி சொன்ன தகவலின்பேரில் 15 இலட்சத்துடன் காரில் வந்ததாகவும், அண்ணாச்சியும், அவரது நண்பர் விஜயகுமாரும் மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் Inspector என்றும், SI என்றும் சொன்னதாகவும் தான் வைத்திருந்த பணம் ரூ.15 இலட்சத்தை வாங்கி கொண்டு காவல் நிலையத்திற்கு வரும்படி சொல்லிவிட்டு சென்றதாகவும் மற்றவர்களும் சென்றுவிட்டதாகவும் அ.சா.1 தனக்கு சந்தேகமாக இருந்ததால் SI என்று சொன்ன உதயசங்கரை பிடித்து விசாரித்த போது அவர் தான் inspector இல்லை என்றும் கொண்டலாம்

பட்டியில் வேலை செய்யும் SSI என்று சொன்னதாகவும், தானும், அண்ணாச்சி மற்றும் விஜயகுமார் ஆகியோர் சேர்ந்து பணத்தை கொள்ளையடிக்க வந்ததாகவும், எனவே அ.சா.1ம், அசா.2ம் உதயசங்கருடன் ஓமலூர்காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததாகவும், அந்த புகாரின்பேரிலான விசாரணையில் மேற்கண்ட சங்கதிகளை வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது அ.சா.1ம் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**
SC.No.56/2023

நாள். 13.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 13.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.5 | ஜாதி | :----------- |
| பெயர் | பிரபாகரன் | தொழில் | : |
| த/பெ. | மாதையன் | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(1, 2, 3, 5, 6 Accused present) (A4 Died)**

**முதல் விசாரணை:-**

1. நான் தும்பிபாடி கிராமம், ஒட்டத்தெருவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1, அ.சா.2ஐ தெரியாது. நான் கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்பு சேலம் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் வந்து ஆசை ஆசை ஆனந்த பவன் ஓட்டலில் நிறுத்தி விடியற்காலை சுமார் 6 மணி சுமாருக்கு டீ குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். நான் போய் பார்த்தபோது எந்த ஏறியா என்று கேட்டார்கள் எனது பெயர், முகவரியை கேட்டு வாங்கிகொண்டார்கள் மற்றப்படி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் விசாரணையில் கடந்த 01.11.2021ம் தேதி மாலை 4 மணிக்கு நானும் எனது நண்பர் சக்திவேல் என்பவரும் கோவையில் இருந்து வரும் சக்திவேலின் உறவினரை அழைத்து செல்வதற்காக நின்றிருந்தோம் என்றும், அப்போது TN 30 BF 9667 ஐ10 என்ற காரில் இரண்டுபேரும் TN 30 AE 5065 என்ற பதிவெண் கொண்ட Hero honda மோட்டார் சைக்கிளில் இரண்டு பேரும் வந்து பேசிக்கொண்டிருந்ததாகவும், கொஞ்ச நேரத்தில் TN 30 BK 9279 என்ற யுனிகான் மோட்டார் சைக்கிளில் ஒருவரும் tn 52 R 8883 என்ற கீயா காரில் ஒருவர் வந்ததாகவும் கீயா காரில் வந்தவர் காரை அங்கேயே ஓரமாக நிறுத்திவிட்டு ஐ10 காரில் ஏறிவிட்டதாகவும் ,அவர்கள் அனைவரும் ஏதோ கெட்ட நோக்கத்துடன் ஒன்று சேர்ந்திருப்பதாக தெரிந்து நானும், சக்திவேலும் அவர்கள் அருகில் சென்று அவர்கள் பேசுவதை கேட்டதாகவும் அவர்கள் பேசியதிலிருந்து ஐ10 காரில் வந்தவர்கள் அண்ணாச்சியும் அவரது மகனும் என்று தெரிந்து கொண்டோம் என்றும், Hero honda super splendor மோட்டார் சைக்கிளில் வந்தவர் போலீஸ் சரவணன் என்றும், யுனிகான் மோட்டார் சைக்கிளில் வந்தவர் வழக்கறிஞர் என்றும், கீயா காரில் வந்தவர் வழக்கறிஞரின் உறவினர் என்றும் தெரிந்து கொண்டோம் என்றும், அவர்கள் திருவண்ணாமலையை சேர்ந்த பழனி என்பவரிடம் தங்க காசு ரூ.300 குறைவாக இருப்பதாக சொன்னதாகவும், அவரும் ரூ. 15 இலட்சத்திற்கு தங்க காசு கேட்டதாகவும், 01.11.2021ம் தேதி மாலை 6 மணிக்கு ஓமலூர் பை பாஸ்ரோட்டில் உள்ள ஆனந்த பவன் ஓட்டல் அருகில் வரச்சொல்லி இருப்பதாகவும், அவரிமிருந்த பணத்தை கொள்ளையடிக்க இருப்பதாக பேசிக்கொண்டதாகவும், மேற்படி நபர்கள் எங்களை பார்த்து பார்த்து

பேசிக்கொண்டிருந்ததால் நாங்கள் பயந்துபோய் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், மேற்படி நபர்கள் பேசியப்படி அ.சா.1னிடம் இருந்து ரூ.15 இலட்சத்தை கொள்ளையடித்து சென்றதாகவும், இதுகுறித்து ஓமலூர் போலீசார் வழகககு போட்டு மேற்படி நபர்களை கைது செய்துவிட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளும், அசா.1ம் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.56/2023

நாள். 13.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 13.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.6 | ஜாதி | :----------- |
| பெயர் | சக்திவேல் | தொழில் | : |
| த/பெ. | பெருமாள் | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(1, 2, 3, 5, 6 Accused present) (A4 Died)**

**முதல் விசாரணை:-**

1. நான் குப்பூரில், குடியிருந்து ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1, அ.சா.2ஐ தெரியாது. அ.சா.5ஐ தெரியும். நான் மார்கெட் போவதற்காக ஆனந்த பவன் ஓட்டல் அருகே உள்ள சர்வீஸ் ரோட்டிற்கு அருகே எனது இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தேன். அப்போது போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். நான் போய் பார்த்தபோது எந்த ஏறியா என்று கேட்டார்கள் எனது பெயர், முகவரியை கேட்டு வாங்கிகொண்டார்கள் மற்றப்படி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் விசாரணையில் கடந்த 01.11.2021ம் தேதி மாலை 4 மணிக்கு நானும் எனது நண்பர் பிரபாகரன் என்பவரும் கோவையில் இருந்து வரும் எனது உறவினரை அழைத்து செல்வதற்காக நின்றிருந்தோம் என்றும், அப்போது TN 30 BF 9667 ஐ10 என்ற காரில் இரண்டுபேரும் TN 30 AE 5065 என்ற பதிவெண் கொண்ட Hero honda மோட்டார் சைக்கிளில் இரண்டு பேரும் வந்து பேசிக்கொண்டிருந்ததாகவும், கொஞ்ச நேரத்தில் TN 30 BK 9279 என்ற யுனிகான் மோட்டார் சைக்கிளில் ஒருவரும் tn 52 R 8883 என்ற கீயா காரில் ஒருவர் வந்ததாகவும் கீயா காரில் வந்தவர் காரை அங்கேயே ஓரமாக நிறுத்திவிட்டு ஐ10 காரில் ஏறிவிட்டதாகவும் ,அவர்கள் அனைவரும் ஏதோ கெட்ட நோக்கத்துடன் ஒன்று சேர்ந்திருப்பதாக தெரிந்து நானும், பிரபாகரனும் அவர்கள் அருகில் சென்று அவர்கள் பேசுவதை கேட்டதாகவும் அவர்கள் பேசியதிலிருந்து ஐ10 காரில் வந்தவர்கள் அண்ணாச்சியும் அவரது மகனும் என்று தெரிந்து கொண்டோம் என்றும், Hero honda super splendor மோட்டார் சைக்கிளில் வந்தவர் போலீஸ் சரவணன் என்றும், யுனிகான் மோட்டார் சைக்கிளில் வந்தவர் வழக்கறிஞர் என்றும், கீயா காரில் வந்தவர் வழக்கறிஞரின் உறவினர் என்றும் தெரிந்து கொண்டோம் என்றும், அவர்கள் திருவண்ணாமலையை சேர்ந்த பழனி என்பவரிடம் தங்க காசு ரூ.300 குறைவாக இருப்பதாக சொன்னதாகவும், அவரும் ரூ. 15 இலட்சத்திற்கு தங்க காசு கேட்டதாகவும், 01.11.2021ம் தேதி மாலை 6 மணிக்கு ஓமலூர் பை பாஸ்ரோட்டில் உள்ள ஆனந்த பவன் ஓட்டல் அருகில் வரச்சொல்லி இருப்பதாகவும், அவரிமிருந்த பணத்தை கொள்ளையடிக்க இருப்பதாக பேசிக்கொண்டதாகவும், மேற்படி நபர்கள் எங்களை பார்த்து பார்த்து பேசிக்கொண்டிருந்ததால் நாங்கள் பயந்துபோய் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், மேற்படி நபர்கள் பேசியப்படி அ.சா.1னிடம் இருந்து

ரூ.15 இலட்சத்தை கொள்ளையடித்து சென்றதாகவும், இதுகுறித்து ஓமலூர் போலீசார் வழக்கு போட்டு மேற்படி நபர்களை கைது செய்துவிட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளும், அசா.1ம் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.